**பெல்மதுள்ள பிரதேச சபையின் 2025.10.08 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை**

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

02. கௌரவ பிரதேச சபை உப தலைவர் - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன
03. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன
04. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம
05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
06. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர
07. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டப்ளிவ். நிர்மிக தீபால் அபேவர்தன
08. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால்
09. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க
11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர
12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார
13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார
14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசாந்த்த
15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சாந்த புஸ்பகுமார குடாவத்த
17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. மயூரி சத்துரிக்கா பரணமான்ன
18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். வசந்த குமாரசிறி
19. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. இராஜேந்திரன் திரிசோக்
20. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ. இந்திக்க குமார
21. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
22. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா
23. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி
24. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மொஹான் மஞ்சுல
25. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட
26. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்மால்
27. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன
28. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க
29. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.பீ. ஜகத் சேனாரத்தின
30. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி
31. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி
32. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன
33. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். ஜெஹன் மோஹன்
34. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. தனேஸ் குமரன்

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ உப தலைவர், கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01. கடந்த பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல். (2025.09.11)

2025.09.11 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த்த பிரேமகுமார பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக செலவளிக்கப்பட்ட ரூபா. 673,898.80 தொகைக்கான செலவு அறிக்கை தெரிந்துகொள்வதற்காக கௌரவ சபைக்கு முன்வைக்கப்பட்டது.
2025.08.20 ஆம் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளின் முன்னேற்றங்கள் கௌரவ சபைக்கு முன்வைக்கப்பட்டன.

கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களின் பிரேரணை இலக்கம் 01, 02 – கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு உள்ளதால் இதற்கு பிரதேச சபையின் எவ்வித தலையீடுகளும் இல்லை என்றும், இலக்கம் 03 இன் கீழான பிரேரணை விடய வரம்புக்கு உரியது அல்ல என்று தெரிவிக்கப்பட்டது.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ். மொஹான் மஞ்சுல அவர்களின் பிரேரணை இலக்கம் 01 - கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் தற்போது இவ் அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி அவர்களின் பிரேரணை இலக்கம் 01, 02, 03 - கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் தற்போது இவ் அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்களின் பிரேரணை இலக்கம் 01 – பெகோ இயந்திரம் பழுதுபார்த்ததன் பின்னர் இந்த பிரேரணை பற்றி கவனத்தில் எடுத்துக் கொள்வதாகவும், பிரேரணை இலக்கம் 02 – இந்த பிரேரணை தெளிவு இல்லாமை காரணமாக உரிய வீதி பிரதேச சபைக்கு சொந்தமான வீதி ஒன்றா என்பதனை தெளிவாக குறிப்பிடும் படியும், பிரேரணை இலக்கம் 03 - இந்த பிரேரணை கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் உள்வாங்கப்பட்டு உள்ளதால் பிரதேச சபையின் எவ்வித பங்களிப்பும் இல்லை என்றும், பிரேரணை இலக்கம் 04 – பிரதேச சபையின் பங்களிப்பு செய்யும் என்றும், பிரேரணை இலக்கம் 05 - இந்தப் பிரேரணை இணைப்புக் குழு கூட்டத்திற்கு முன்வைக்கப்பட்டு அதன் பின்னர் தேசிய இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மூலம் பெகோ மணிக்கக்கல் அகழ்வு சுரங்கங்கள் மூடப்பட்டு உள்ளதால் இது பற்றி விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட அவர்களின் பிரேரணை இலக்கம் 01 – இந்த அபிவிருத்தி பணி தொடர்பாக மதிப்பீடு ஒன்றை செய்து பிரதேச சபையின் ஊடாக மேற்கொள்வதற்கு முடியாது என்றால்

அரசின் அபிவிருத்தி திட்டங்களின் கீழ் உள்ளடக்குவது என்றும், பிரேரணை இலக்கம் 02, 03 - இந்த பிரேரணைகள் கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் உள்வாங்கப்பட்டு உள்ளதால் பிரதேச சபையின் எவ்வித பங்களிப்பும் இல்லை என்றும், பிரேரணை இலக்கம் 04 – வருங்காலத்தில் மேற்கொள்ள உள்ளது என்றும், பிரேரணை இலக்கம் 05 - கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் உள்வாங்கப்பட்டு உள்ளதால் பிரதேச சபையின் எவ்வித பங்களிப்பும் இல்லை என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன அவர்களின் பிரேரணை இலக்கம் 01 – தற்போது வெள்ளிக்கிழமைகளில் உக்காத கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன என்றும், திறக்டர் இயந்திரம் பழுதுபார்த்ததன் பின்னர் உக்கும் கழிவுகளை சேகரித்தல் தொடர்பாக அவதானம் செலுத்தப்படும் என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க தன அவர்களின் பிரேரணை இலக்கம் 01 – பெகோ இயந்திரம் பழுதுபார்த்ததன் பின்னர் இந்த பிரேரணை தொடர்பாக அவதானம் செலுத்தப்படும் என்றும், பிரேரணை இலக்கம் 02 – பிரதேச சபையின் வாகனங்களின் எரிபொருள் அறிக்கை ஒன்று பொதுச் சபை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு உள்ளது என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.பீ. ஜகத் சேனாரத்தின அவர்களின் பிரேரணை இலக்கம் 01, 03 - இந்த பிரேரணைகள் கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் உள்வாங்கப்பட்டு உள்ளதால் பிரதேச சபையின் எவ்வித பங்களிப்பும் இல்லை என்றும், பிரேரணை இலக்கம் 02 – சட்டத்தின் கீழ் தொடர்பு இல்லாததன் காரணத்தினால் பிரதேச சபையின் எவ்வித பங்களிப்பும் இல்லை என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார பிரேரணை இலக்கம் 01, 05 - இந்த பிரேரணைகள் கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் உள்வாங்கப்பட்டு உள்ளதால் பிரதேச சபையின் எவ்வித பங்களிப்பும் இல்லை என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ். ஜேஹன் மோகன் அவர்களின் பிரேரணை இலக்கம் 01, சட்டத்தின் கீழ் தொடர்பு இல்லாததன் காரணத்தினால் பிரதேச சபையின் எவ்வித பங்களிப்பும் இல்லை என்றும், பிரேரணை இலக்கம் 02 – வருங்காலத்தில் பரிசீலனை செய்யப்படும் என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். தனேஸ் குமரன் அவர்களின் பிரேரணை இலக்கம் 01,02 - இந்த பிரேரணைகள் கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளின் கீழ் உள்வாங்கப்பட்டு உள்ளதால் பிரதேச சபையின் எவ்வித பங்களிப்பும் இல்லை என்றும்,

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர அவர்களின் பிரேரணை இலக்கம் 02 – தொழிநுட்ப உத்தியோகத்தர் களப் பரிசோதனை செய்து உள்ளார் என்றும், அதனுடன் தொடர்புடைய நபர்களுக்க எச்சரிக்கை விடுவதற்கும் வருங்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு என்றும்,

கௌரவ சபைக்கு தெரிவிக்கப்பட்டது.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ சுகத் சாந்த அமரசேகர மற்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன ஆகியோர் மு.ப. 10.30 இற்கு பொதுச் சபைக் கூட்டத்தில் இருந்து வெளியேறினர்.

03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை

நோய் நிலமைகள் காரணமாக பொது சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எச்.ஜீ. சச்சினி செவ்வந்தி அவர்களின் லீவு அனுமதித்தல் உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. மயூரி சத்துரிக்கா பரணமான்ன அவர்கள் ஆமோதித்தார்.

04. கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :- இல்லை

05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :-

01. வார சந்தை நடைபெறும் காணிமீது தொடுக்கப்பட்டு உள்ள வழக்கின் தற்போதைய நிலை என்ன?

**<u>பதில் 01</u>**

சபைக்கு சொந்தமான இந்த காணி தொடர்பாக உரிமை உண்டு என்று குறிப்பிட்டு வழக்கு தொடுக்கப்பட்டு உள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு இலக்கம் | - 5741 | இராஜகருனா செனெவிரத்ன திசாநாயக்க |
| தோகை | - ரூபா. 6,500,000.00 | முதியன்சே இராலஹாமிகே சந்தன |
| சுபாவம் | - காணி | பெமிணியவத்த பண்டார வெரலுப வலவ்வ |
| | | வெரலுப, இரத்தினபுரி |
| | | முறையீட்டாளர் |
| | | 01. லியனவடு ஆரச்சிகே ஜகத்சிறி லியனகே |
| | | இல. 06/159, இஹல போபிடிய வீதி, கலுகம்முல்ல, பெல்மதுள்ள |

மற்றும் இன்னும் ஒரு நபருக்கு எதிராக பெல்மதுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. (2019.11.29 ஆம் திகதி குறிப்பிடப்பட்டு உள்ள பணி குறிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில்) வேறு வெளி கட்சிகள் மூலம் பிரதேச சபை காணி மீது வழக்கு தொடுக்கப்பட்டு நடாத்திச் செல்வதால் பிரதேச சபையினால் தனது உரிமை தொடர்பாக சட்டத்தரணி திருமதி. சீதா இரன்ஜனி விக்கிரமபால அவர்களின் சட்ட ஆலோசனைகளுக்கு ஏற்ப சிவில் நடைமுறை சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த வழமகில் ஒரு இடைக்கால மனுதாரர் என்ற ரீதியில் ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றத்தில் கோரப்பட்ட கோரிக்கைக்கு நீதிமன்ற நீதிபதி கருத்து தெரிவித்து நிராகரித்து உள்ளார். மேலும் பிரதிவாதி ஒருவராக ஏற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்ட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டு உள்ளது. (நிதிமன்றம் மூலம் 2020.02.20 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்பில் குறிப்பிடப்பட்டு உள்ளது)

வழக்கில் இருந்து நீக்கப்பட்டதன் காரணத்தினால் 2020 ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப சட்டத்தரணி திரு. நந்தபால விக்கிரமசூரிய மூலம் பிரதேச சபைக்கு எதிராக வழங்கப்பட்டு இருந்த தீர்ப்புக்கு எதிராக இரத்தினபுரி சிவில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல்

செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. ( வழக்கு என் HC/RA/11/2020 கீழ் வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.)

சிவில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2020.09.10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022.02.10 ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. ( மேல் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பணி குறிப்புகளுக்கு ஏற்ப) இரத்தினபுரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஏற்ப பிரதேச சபையையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மனுதாரராக 2023.04.28 ஆம் திகதியில் இருந்து பெல்மதுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கு பரிசீலிக்கப்பட்டு வருவதோடு இருதியாக 2025.07.03 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளதுடன் வழக்குத் திகதி 2025.12.11 ஆம் திகதி ஆகும். இடைக்கால மனுதாரர் என்ற ரீதியில் இச் சொத்து தொடர்பாக பிரதேச சபைக்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை முன்வைப்பதற்கு உள்ளது. (2023.06.03 ஆம் திகதியில் இருந்து 2024.02.02 ஆம் திகதி வரை நடைபெற்ற வழக்கு தடவைகளுக்கு ஏற்ப பணிக் குறிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளன.) அந்த திகதியில் இருந்து 2025.07.03 ஆம் திகதி வரையாய பணிக் குறிப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்தில் பணம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன்.

இரத்தினபுரி சிவில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து தீர்ப்பு பெற்றுக்கொள்வதற்காக சட்டத்தரணி திரு. நந்தபால விக்கிரமசூரிய அவர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணத் தொகை ரூபா. 550,000.00 ஆகும்.

இரத்தினபுரி சிவில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னர் இடைக்கால மனுதாரர் என்ற ரீதியில் இணைந்து பெல்மதுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கில் வாதிடுவதற்கு சட்டத்தரணி திருமதி. சீதா இரன்ஜனி விக்கிரமபால அவர்களுக்கு பிரதேச சபை இதுவரை செலுத்திய பணம் ரூபா. 27,000.00 ஆகும்.

பிரதேச சபையினால் இந்த வழக்கிற்கு செலவளித்த ஏனைய செலவுகள் (உத்தியோகத்தர்களின் பிரயானச் செலவுகள் தவிர்ந்த) சட்டத்தரணி கட்டணங்களாக ரூபா. 577,000.00 தொகை செலவு செய்யப்பட்டு உள்ளது.

02) தகனசாலை காணியினுள் வேறு மாணிக்கக் கல் சுரங்கங்களில் இருந்து சுரங்கங்கள் தோண்டப்பட்டு உள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் அச் சுரங்கங்களின் மாணிக்க மண் கழுவப்பட்டு நீதிமன்றத்தில் வைப்பில் இடப்பட்டு உள்ள இரத்தினக்கற்கள் மற்றும் அவ் வழக்கின் தற்போதைய நிலை என்ன?

<u>பதில் 02</u>
பெல்மதுள்ள தகனசாலை கட்டிடம் கல்லேபிட்டஹேன என்கின்ற கல்கொடேஹேன என்கின்ற காணியில் அமைந்துள்ளது. இந்த காணிக்கு வலது புற பள்ளத்தின் பொது எல்லைக்கு எல்லையாகும் கல்கும்புற என்கின்ற தனியார் காணி இரத்தினபுரி தேசிய இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையினால் 04 நபர்களுக்கு மாணிக்கக் கல் அகழ்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு ஆயத்தம் ஆகும்போது மாணிக்கக் கல் அகழ்வு ஆரம்பித்தால் மேலே அமைந்துள்ள தகனசாலை கட்டிடம் மற்றும் காணிக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக செயலாளர் தேசிய இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு எழுத்து மூலம் அறிவித்து உள்ளார். ஆனால் அதிகாரகபை மாணிக்கக் கல் அகழ்வதற்கு அனுமதி அளித்து உள்ளது. தினந்தோரும் அந்த இடத்தில் நடைபெறும் செயல்களுக்கு ஏற்ப தகனசாலை காணிக்கு கீழ் மாணிக்க சுரங்கம் தோண்டப்பட்டு உள்ளனவா இல்லையா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பிரதேச சபை மற்றும் அதிகாரசபை இணைந்து பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் இல. 11, பான்ஸ் இரத்வத்தை வீதி, பலாங்கொடை விலாசத்தில் வசிக்கும் திருமதி. ஹிருனிகா பஸ்னாயக்க அவர்களுக்கு சொந்தமான சுரங்கத்தில் தோண்டப்பட்டு உள்ள சுரங்கம் பொது எல்லைக்கு இடையில் உள்ள ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை தாண்டி தகனசாலை காணியினுள் நுழைந்து உள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த சுரங்கத்தில் இருந்து எடுக்கப்பட்ட மாணிக்க மண் அதிகாரசபையினால் தடை செய்யப்பட்டுள்ளது.

பின்னர் இந்த மாணிக்க மண்ணை பாதுகாப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணத்தினால் அதிகாரசபை, பிரதேச சபை, அனுமதிப்பத்திரதாரர் முன்னிலையில் கழுவி சுத்தம்செய்து பின்னர் கிடைக்கப்பெற்ற மாணிக்கக் கற்கள் அதிகாரசபையின் அதிகார கட்டுப்பாட்டின் கீழ் முத்திரை இடப்பட்டு அனுமதிப்பத்திரதாரர் பாதுகாப்பில் வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கூறிய நிகழ்வு நடைபெற்ற கால எல்லையினுள் பிரதேச சபை தகனசாலை காணியில் 3/8 காணி அளவிற்கு உரிமை கோரி 01. முல்வத்த ஆரச்சிகே சந்திரதிலக மற்றும் 02. தோன ரொசலின் எதிரிசிங்க வித்தியால வீதி, பெல்மதுள்ள விலாசத்தில் வசிக்கும் நபர்களினால் பிரதேச சபைக்கு எதிராக பெல்மதுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண் 6840 இன் கீழ் காணி வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டு உள்ளது. அப்படி தொடுக்கப்பட்ட வழக்கு 2021.12.10 ஆம் திகதியில் இருந்து 2024.02.22 ஆம் திகதி வரை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 2024.02.22 ஆம் திகதி வழக்கு விசாரணையின் போது முறைப்பாடு செய்த கட்சியினர் வழக்கை மீளப்பெற்றதன் காரணமாக வழக்கு விசாரணைகள் முடிவடைந்து உள்ளன. (நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணிக் குறிப்புக்களுக்கு ஏற்ப)

இந்த வழக்கு முடிவடைந்த பின்னர் பிரதேச சபையினால் நிலஅளவைத் தினைக்களத்தின் மூலம் தகனசாலை காணியின் எல்லைகளை அளந்து தீர்த்து வேலிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏல்லை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு இருப்பதனால் எல்லை மீறப்பட்டு உள்ளதால் அதிகாரசபையினால் முத்திரையிடப்பட்டு உள்ள மாணிக்கக் கற்கள் தொடர்பாக அதிகாரசபையுடன் ஒன்றினைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை தெரிவிக்கின்றேன்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பிரதேச சபையினால் பராமரிக்கப்படும் கோவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டவை என்பதனை தெரிவிக்கின்றேன்.

06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்

1. **கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மானிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. பெல்மதுள்ள பிரதேச சபையின் விலைகோரல் நடவடிக்கைகளுக்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான விலைமனு கோரல் கமிட்டிக்காக நியமிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

| | |
|---|---|
| கௌரவ தலைவர் | - திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற |
| செயலாளர் | - திரு. ஆர்.கே. கபில ஜகத் குமார |
| தொழிநுட்ப உத்தியோகத்தர் | - திரு. பி.எம்.எஸ்.அயி. யோகரத்த |
| | - திரு. எச். ஜயசிங்க |
| உறுப்பினர்கள் | - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன |
| | - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார |
| | - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர |
| | - திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி |
| | - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன |
| | - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 01**

மேற்கூறிய விலைகோரல் கமிட்டி ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

2. ஆளுனரின் செயலாளரின் இலக்கம் GS/ES/06/14 (41 அத்தியாயம்) மற்றும் 2025.01.15 ஆம் திகதியுடைய கடிதத்தின் பிரகாரம் இந்த பிரதேச சபையின் கழிவு முகாமை தொடர்பாக உழைப்பை கொள்வனவு செய்வது என்ற அடிப்படையில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஊழியர்களை பிரிப்பது என்ற ரீதியில் அனுமதிக்கப்பட்டு உள்ள சாரதி பதவிக்காக இல.36, மாஷல்வெலிய, வெலிமலுவ, லெல்லொபிட்டிய முகவரியில் வசிக்கும் திரு. தங்கவேலு சுரேஸ்குமார் என்பவரை நியமிப்பது உகந்தத என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், பதவிகளுக்காக நியமனம் செய்யும் போது உகந்த முறையில் நியமனம் செய்யுமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தற்போது பிரதேச சபையில் நிரந்தரம் அற்ற சாரதிகளை பதவியில் நிரந்தரம் ஆக்குவதற்கு தேவையான பொறிமுறை ஒன்றை தயாரிப்பதற்கு அவதானத்தை செலுத்துமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. டி.எம். மஞ்சுள தசநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 02**

உழைப்பை கொள்வனவு செய்வது என்ற அடிப்படையில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஊழியர்களை பிரிப்பது என்ற ரீதியில் அனுமதிக்கப்பட்டு உள்ள சாரதி பதவிக்காக இல.36, மாஷல்வெலிய, வலிமலுவ, லெல்லொபிட்டிய முகவரியில் வசிக்கும் திரு. தங்கவேலு சுரேஸ்குமார் என்பவரை நியமிப்பது உகந்தத என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

03. பெல்மதுள்ள பிரதேச சபையின் உரிய அனுமதிப்பத்திரம் ஒன்று இல்லாமல் திரு. ஜி.எல்.டி.டி. த சில்வாவினால் உடதுல கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்ட உடதுல மெத வீதி, ருப்பெவத்த வீதி, பெல்மதுள்ள என்ற இடத்தில் ஆபத்தான முறையில் கட்டப்பட்டு உள்ள அனுமதியற்ற பக்கசுவர் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த பக்கசுவரானது ஆபத்தான முறையில் கட்டப்பட்டு உள்ளது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திருமதி. பி. துசாரி தமயன்தி மற்றும் திரு. கே. சான்த குமார குடாவத்த அவர்கள் தெரிவித்தனர்.

கருத்து தெரிவிக்கையில், இந்த பக்கசுவரை இடித்து ஒதுக்கவதற்கு அந்நபர் ஒத்துக்கொண்டதாகவும் அதற்கு சிறிது காலம் பெற்றுத் தரும்படி கேட்டதாக கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜி . நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தனர்.

**முடிவுகள் இலக்கம் 03**

இந்த அனுமதியற்ற பக்கசுவர் தொடர்பாக திரு. ஜி.எல்.டி.டி. த சில்வாவிற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

04. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமன கல்லேபிட்டஹேன தகனசாலை காணியில் அத்துமீறி குடியிருக்கும் 09 குடும்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுக்கும் பொருட்டு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

பிரேரணை இலக்கங்கள் 04 – 05 என்பவற்றை ஆலோசிப்பதற்கு பொது சபையை செயற்பாட்டுக் குழுவாக கருதவேண்டும் என்ற பிரேரணையை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் முன்வைக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் ஆமோதித்தார்.

இந்த காணி தொடர்பாக செயலாளர் கருத்து தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், காணியை கையளிப்பு செய்வது தொடர்பாக பிரதேச சபைக்கு எவ்வித சட்ட ரீதியான அதிகாரங்களும் இல்லை என்பதால் உரிய முறையில் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருடாந்த குத்தகை அடிப்படையில் அக் காணியை வதிவிடதாரர்களுக்கு வழங்குவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

பொது சபையை செயற்பாட்டுக் குழுவாக கருதவேண்டும் என்ற பிரேரணையை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் முன்வைக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் ஆமோதித்தார்.

**முடிவுகள் இலக்கம் 04**

காணியை கையளிப்பு செய்வது தொடர்பாக பிரதேச சபைக்கு எவ்வித சட்ட ரீதியான அதிகாரங்களும் இல்லை என்பதால் இந்த காணித் துண்டுகளுக்கு உரிய முறையில் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக கௌரவ ஆளுநரிடம் ஆலோசனை பெறுவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

05. கெடேதென்ன கல்உலுவஸ்சாஹேன காணியில் அத்துமீறி வசிக்கும் 07 குடும்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுக்கும் பொருட்டு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 05**

காணியை கையளிப்பு செய்வது தொடர்பாக பிரதேச சபைக்கு எவ்வித சட்ட ரீதியான அதிகாரங்களும் இல்லை என்பதால் இந்த காணித் துண்டுகளுக்கு உரிய முறையில் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக கௌரவ ஆளுநரிடம் ஆலோசனை பெறுவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

06. பெல்மதுள்ள பிரதேச சபை வளாகத்தில் சேவை கராஜ் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக தொழிநுட்ப சேவைகள் குழுவினால் பெறப்பட்ட பரிந்துரை தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுக்கும் பொருட்டு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இதற்கு சேவை ஊழியர் ஒருவர், பயிற்றப்பட்ட உழியர்கள் பணியில் அமர்த்துவதற்கு நேரிடும், உரிய உபகரணங்கள் கொள்வனவு செய்ய நேரிடும் என்பதால் இந்த விடயங்களை பூர்த்திசெய்துகொண்டு 2026 ஆம் ஆண்டில் பிரதேச சபையினுள் சேவை கராஜ் ஒன்றை ஆரம்பிப்பதற்கும், 2027 ஆம் ஆண்டு ஆகும்போது இதை விருத்தி செய்து நிறுவனத்திற்கு வெளியே கொண்டு செல்வதற்கும் அரச நிறுவனங்களின் அனைத்து வாகனங்களையும் பழுதுபார்ப்பதற்கும் இலகுவாக சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும், தனியார் வாகனங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் பிரதேச சபைக்கு வருமானம் பெற்றுக்கொள்ள முடியும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த விடயத்தை நடைமுறைப்படுத்தும் முறை முக்கியமானது என்றும், இதனால் பிரதேச சபை வாகனங்கள் பழுதுபார்த்தல்களுக்காக செலவாகும் தொகையை குறைத்துக்கொள்ள முடியும் என்றும், வாகனங்களை நல்ல முறையில் பராமரித்துக்கொள்ள முடியும் என்பதனால் விரைவாக இச் சேவை கரஜை ஆரம்பிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 06**

மேற்குறிப்பிட்ட பிரேரணை தொடர்பாக முடிவு எடுப்பதற்கு முன் நிறுவனம் என்ற ரீதியில் இந்த செயலை செய்வதற்கான சட்டரீதியான நிலைமை பற்றி ஆராய்வதற்கும், இது தொடர்பாக அரசின் கொள்கைகள் எந்த விதத்தில் செயல்படுகின்றன என்றும், ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்தல், நிறுவனத்திற்கு தெவையான வளங்களை பெற்றுக்கொள்வது தொடர்பிலும், சேவைகளின் தரங்களை மதிப்பீடு செய்தல், அரச விதிமுறைகளுக்கு உட்பட்டது என்றும், பிரதேச சபை நிதியில் இருந்து ஆரம்பத்தில் எவ்வளவு தொகை செலவளிப்பது என்றும், ஆரம்ப மூலதன நிதியை திரட்டும் போது அரசினால் அல்லது மாகாண சபையினால் இதற்கு பங்களிப்பு செய்யப்படுமா என்று ஆராய்வதற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்மால், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசாந்த குமார புத்தஆரச்சி, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ். மொஹான் மஞ்சுல, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. வீ.ஏ. கயான் புஸ்பகுமார அனைவரையும் உள்ளடக்கிய கமிட்டி ஒன்றை நியமிப்பதற்கும், இதன் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை ஒன்றை 03 மாதங்களுக்கு முன் வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

07. 2026 ஆம் ஆண்டிற்கான வருமானங்கள் விதித்தல் தொடர்பான பிரேரணை கௌரவ சபைக்கு முன்வைத்தல்.

**i. 2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு வரி விதித்தல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பெல்மதுள்ள பிரதேச சபையிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டு உள்ள அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அனைத்து வீடுகள் கட்டிடங்கள் காணிகள் மற்றும் வரிசை வீடுகள் என்பவற்றிற்கு 2024 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையானது 2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும், பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மேற்கூறிய ஆதனங்கள் தொடர்பில் மேற்கூறிய மதிப்பீட்டிற்கான வருடாந்தப் பெறுமதியின்

01. பெல்மதுள்ள பிரதேச சபையின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றம் செய்யப்பட்ட கிராமங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து அசையாத ஆதனங்கள் தொடர்பில் நூற்றுக்கு ஆறு (6%) வருடாந்த மதிப்பீட்டுவரி விதிக்கப்பட வேண்டும் எனவும்,

02. பெல்மதுள்ள பிரதேச சபையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மாரபன உப அலுவலகம் அமைந்துள்ள அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றம் செய்யப்பட்ட கிராமங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து அசையாத ஆதனங்கள் தொடர்பில் நூற்றுக்கு நான்கு (4%) வருடாந்த மதிப்பீட்டுவரியானது 2026 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட வேண்டும் எனவும்,

அவ் மதிப்பீட்டு வரியானது, அவ் பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் பிரகாரம் அவ் வருடத்தின் மார்ச் மாதம் 31, ஜுன் மாதம் 30, செப்தெம்பர் மாதம் 30 மற்றும் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிகளில் முடிவடையும் நான்கு காலாண்டுகளினுள் சமமான நான்கு தவனைகள் மூலம் செலுத்துவதற்கான ஆணை பிறப்பிப்பதற்கு பெல்மதுள்ள பிரதேச சபைக்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 - 1**

2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு வரி விதித்தல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ii. 2026 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி விதித்தல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் பெல்மதுள்ள பிரதேச சபையிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 135 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஏக்கர் வரி விதிப்பில் இருந்து விடுவித்து இல்லாத நிரந்தர அல்லது தொடர்ச்சியாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள,

அ) ஐந்து ஹெக்டயர் அல்லது அதற்கு கூடுதலான ஒவ்வொரு காணிகளுக்கும், அக் காணியின் ஒவ்வொரு ஹெக்டயர் மீதும் வருடம் ஒன்றிற்கு ரூபா. 10.00 வீதத் வருடாந்த ஏக்கர் வரி ஒன்று விதித்து அறவிட்டுக் கொள்வதற்கும்,

ஆ) மேற்கூறிய சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் பெல்மதுள்ள திரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் விசேட பிரதேசம் ஒன்றாகக் கருதப்படுகின்றமை தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் (iv)ஆ ஆம் இலக்கமும் மற்றும் 1989.02.03 ஆம் திகதியுடைய வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு, ஒரு ஹெக்டயருக்கு மேற்பட்ட ஆனால் ஐந்து ஹெக்டயர்களுக்கு குறைந்த ஒவ்வொரு காணி தொடர்பிலும் 2026 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா 50.00 வீதம் வருடாந்த ஏக்கர் விரியொன்றை விதித்து அறவிடுவதற்கும்,

இ) பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (06) ஆம் உட்பிரிவின் பிரகாரம் அவ் வருடத்தின் மார்ச் மாதம் 31, ஜுன் மாதம் 30, செப்தெம்பர் மாதம் 30 மற்றும் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிகளுக்கு முன்னர் வமமான தவனைகள் மூலம் செலுத்துவதற்கான ஆணை பிறப்பிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 - ii**

2026 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி விதித்தல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iii. 2026 ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் வரி விதித்தல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் ஏதாவதொரு சுற்றாடலில் நடத்தி செல்லப்படுகின்ற இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழில் தொடர்பிலும் அந்த அட்டவணையில் II ஆம் நிரலில், ஒவ்வொரு கைத்தொழிலும் நடாத்திச் செல்லப்படுகின்ற இடத்தின் வருடாந்த மதிப்பீட்டிற்கு ஏற்ப நேரொத்த குறிப்பால் காட்டப்பட்டுள்ள அளவிலான கைத்தொழில் வரி 2026 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடப்படல் வேண்டும் என்றும், அக் கைத்தொழில் வரிக்கு உட்பட்டுள்ள நபர் ஒருவர் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பெல்மதுள்ள பிரதேச சபை நிதியத்துக்கு செலுத்த வேண்டும் என்று பெல்மதுள்ள பிரதேச சபை பிரேரிக்கின்றது.

**மேற்கூறிய அட்டவணை**

| 1 ஆம் நிரல் | | 11 ஆம் நிரல் | | |
|---|---|---|---|---|
| | | சுற்றாடலின் வருடாந்த பெருமதி ரூபா | | |
| தொடர் இல. | அதிகாரம் அளிக்கப்படுகின்ற கைத்தொழில் முயற்சி | 750.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | 750.00 ரூபாவிற்கு மேற்பட்ட 1500.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | 1500.00 ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பம் என்றால் |
| 01 | தங்க ஆபரணங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02 | வாஸ்து கைத்தொழில் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03 | அலங்காரப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04 | வாசனைத் திரவியங்கள் / கசாயப் பொருட்கள் / மருந்துப் பொருட்கள் பைக்கட் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05 | படங்கள் பிரேம் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06 | மட்பாண்டங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07 | செயற்கை பூக்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08 | தொலைக்காட்சி அன்டெனாக்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09 | தானிய வகைகள் பைக்கட் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10 | தேயிலை பெட்டிகள் அல்லது பலகை பெட்டிகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11 | கடித உறைகள் அல்லது வேறு விதமான உறைகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12 | மெத்தை வகைகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13 | ஊதுபத்தி வகைகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14 | புத்தகப் பைகள் தைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15 | கைக்கடிகாரங்கள் பழுது பார்த்தல்கள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16 | பித்தளை பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17 | ஆடை வகைகள் தைத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18 | ஸ்டிக்கர் வெட்டுதல் / அறிவித்தல்கள் / பெயர்பலகைகள் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19 | சாவிகள் வெட்டுதல் / சீல்கள் வெட்டுதல் | 500.00 | 750.00 | 1000.00 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 - iii**

2026 ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் வரி விதித்தல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iv. 2026 ஆம் ஆண்டிற்கான தொழில் முயற்சி வரி விதித்தல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பெல்மதுள்ள பிரதேச சபையிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட துணை விதியொன்றின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு அல்லது அச்சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொரு தொழில் முயற்சி வரிப்பணத் தொகை செலுத்த தேவைப்படாத ஏதாவதொரு தொழில் முயற்சி பெல்மதுள்ள பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் 2026 ஆம் ஆண்டில் நடத்திச் செல்லும் எந்தவொரு நபரும், அந்த தொழில் முயற்சியின் கடந்த ஆண்டில் பெற்ற வருமானம் இங்கு கீழ் காணும் அட்டவணையில் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விடய எல்லைக்குள் இருக்கும் சந்தர்ப்பமொன்றில் அதன் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பால் காட்டப்பட்டுள்ள அளவுகளின் படியான தொழில் முயற்சி வரிப்பணத் தொகை ஒன்று 2026 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடப்படல் வேண்டும் என்றும், இந்த வரிக்கு உட்படும் எவரேனும் நபர் ஒருவர் அத் தொழில் முயற்சி வரியை 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பெல்மதுள்ள பிரதேச சபை நிதியத்துக்கு செலுத்த வேண்டும் என்று பெல்மதுள்ள பிரதேச சபை பிரேரிக்கின்றது.

**மேற்கூறிய அட்டவணை**

| 1 ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| தொழில் முயற்சி வரி உரித்தான வருடத்திற்கு முந்தைய வருடத்தில் தொழில் முயற்சி பெற்ற வருமானம் | செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா. சதம் |
| 6,000.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் ஒன்றில் | எதுவும் இல்லை |
| 6,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட ஆனால் 12,000.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் ஒன்றில் | 90.00 |
| 12,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட ஆனால் 18,750.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் ஒன்றில் | 180.00 |
| 18,750.00 ரூபாவிற்கு மேற்பட்ட ஆனால் 75,000.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் ஒன்றில் | 360.00 |
| 75,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட ஆனால் 150,000.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் ஒன்றில் | 1200.00 |
| 150,000.00 ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பம் ஒன்றில் | 3000.00 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 - iv**

2026 ஆம் ஆண்டிற்கான தொழில் முயற்சி வரி விதித்தல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**v. ஏதேனும் கைத்தொழில் முயற்சி ஒன்றை நடாத்திச் செல்வதற்கு தொடர்புடைய துணை விதி ஒன்றின் மூலம் 2026 ஆம் ஆண்டிற்கு வினியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் மீது கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பான பிரேரணை**

பிரதேச சபையினால் தயார் செய்யப்படும் துணை விதி ஒன்றின் மூலம் அல்லது பெல்மதுள்ள பிரதேச சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறைவேற்றப்பட்ட துணை விதி ஒன்றின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபையினால் 2025 ஆம் ஆண்டினுள் வினியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒன்று தொடர்பாக , 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் கீழ் காணும் அட்டவணையில் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தொழில் முயற்சி ஒன்றிற்காக அவ் அட்டவணையில் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பால் காட்டப்பட்டுள்ள அளவுகளின் படியான அனுமதிப்பத்திர கட்டணம் ஒன்று விதித்து அறவிடப்படல் வேண்டும் என்று பெல்மதுள்ள பிரதேச சபை பிரேரிக்கின்றது.

மேலும் மேற்கூறிய இடம் ஒன்றில் அல்லது மனையிடம் ஒன்றில் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க உல்லாச பிரயாணத்துறைச் சபை சட்டத்தின் பிரகாரம் பணிகளுக்காக உல்லாசப் பிரயாணத்துறைச் சபையினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள, அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றாக , சிற்றுண்டிச்சாலை ஒன்றாக , தங்குமிட வசதியளிக்கும் இடம் ஒன்றாக ஆகும்போது அதற்கு ஏற்புடைய அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும்போது அவ்விடம் அல்லது அச்சுற்றாடல் தொடர்பில் 2025 ஆம் ஆண்டில் பெற்ற பெறுகைகளில் இருந்து 1% அனுமதிப்பத்திரக் கட்டணமாக 2026 ஆம் ஆண்டு தொடர்பில் நியமித்து விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் எனவும் பிரேரிக்கப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் 01 - அபாயகரமான தொழில் முயற்சிகள்**

| 1 ஆம் நிரல் | | 11 ஆம் நிரல் | | |
|---|---|---|---|---|
| | | சுற்றாடலின் வருடாந்த பெருமதி (ரூபா. சதம்) | | |
| தொடர் இல. | அதிகாரம் அளிக்கப்படுகின்ற கைத்தொழில் அல்லது வியாபார முயற்சியின் சுபாவம் | 750.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | 750.00 ரூபாவிற்கு மேற்பட்ட 1500.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | 1500.00 ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பம் என்றால் |
| 01 | தச்சு வேலை | 500.00 | 750.00 | 1000.00 |
| 02 | வீட்டு தளபாடங்கள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03 | செங்கல் அல்லது கூரை ஓடுகள் உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | பாதணிகள் திருத்துதல் மற்றும் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05 | சீமேந்து கற்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06 | எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07 | யன்னல் கிறில் வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08 | சீமேந்து பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09 | பழைய பத்திரிகைகள் சேகரித்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10 | அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11 | தேயிலைச் தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12 | கருங்கல் வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13 | கருங்கல் ஆலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை இலக்கம் 02 - வெறுப்பான தொழில் முயற்சிகள்**

| 1 ஆம் நிரல் | | 11 ஆம் நிரல் | | |
|---|---|---|---|---|
| | | சுற்றாடலின் வருடாந்த பெருமதி (ரூபா. சதம்) | | |
| தொடர் இல. | அதிகாரம் அளிக்கப்படுகின்ற கைத்தொழில் அல்லது வியாபார முயற்சியின் சுபாவம் | 750.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | 750.00 ரூபாவிற்கு மேற்பட்ட 1500.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | 1500.00 ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பம் என்றால் |
| 01 | விலங்கு உணவு வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02 | ஆயர்வேத ஔடத வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03 | செயற்கை பசளை வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04 | பாணி , கருப்பட்டி வகைகள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05 | அயிஸ்கிறீம் / அயிஸ் பக்கட் / யோகட் வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06 | இறப்பர் விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07 | கள்ளு சேகரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08 | கருவா விலைக்கு வாங்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09 | கூல் ஸ்பொட் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10 | நூல்டஸ் / இடியப்பட் / சிற்றுண்டி வகைகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11 | மோட்டார் சைக்கிள்கள் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12 | குளிரூட்டப்பட்ட மீன் மற்றும் இறைச்சி வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13 | மறக்கறி வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14 | பழ வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15 | விலங்கு உணவு வகைகள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16 | சுற்றுலாத்துறை வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17 | தேயிலைத் தூல் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18 | இறைச்சிக்காக விலங்கு கொலைக் களம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19 | சாப்பாட்டு அறை / சோற்றுக் கடை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20 | சிற்றுண்டிச்சாலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21 | தேநீர் அல்லது கோப்பி கடை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 22 | பசும் பால் சேகரிக்கும் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23 | மீன் வகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 24 | இறைச்சி வகைகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 25 | கேக் வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 26 | பாற் பண்ணை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 27 | மாட்டும் தொழுவம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 28 | விலங்கு பண்ணை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |

அட்டவணை இலக்கம் 03 - அபாயகரமான மற்றும் வெறுப்பான தொழில் முயற்சிகள்

| 1 ஆம் நிரல் | | 11 ஆம் நிரல் | | |
|---|---|---|---|---|
| | | சுற்றாடலின் வருடாந்த பெருமதி (ரூபா. சதம்) | | |
| தொடர் இல. | அதிகாரம் அளிக்கப்படுகின்ற கைத்தொழில் அல்லது வியாபார முயற்சியின் சுபாவம் | 750.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | 750.00 ரூபாவிற்கு மேற்பட்ட 1500.00 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பம் என்றால் | 1500.00 ரூபாவிற்கு மேற்படும் சந்தர்ப்பம் என்றால் |
| 01 | வேல்டின் வேலை நிலையங்கள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02 | சுண்ணாம்பு சுடுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03 | கட்டிடப் பொருட்கள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04 | மாணிக்க கற்கள் வெட்டுதல் மற்றும் ஒப்பமிடுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05 | கிருமிநாசினிப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06 | கருங்கல் நினைவுச் சின்னங்கள் அல்லது கருங்கல்லினால் செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07 | இயந்திரங்கள் மூலமாக தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08 | சுண்ணாம்பு சுடும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09 | உலோக தகடுகள் மூலம் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10 | மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11 | லேத் பட்டறை வேலைத் தளம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12 | பழைய இரும்பு பொருட்கள் விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13 | மின்கலங்கள் (பற்றரிகள்) மின்னேற்றம் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14 | குரொசரி ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15 | இனிப்பு பண்டங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16 | ஆங்கில மருந்தகங்கள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17 | ஆயுர்வேத மருந்தகங்கள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18 | மோட்டார் வாகனங்கள் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19 | முச்சக்கர வண்டிகள் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20 | இறப்பர் தொழிற்சாலைகள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21 | அயிஸ்கிறீம் / அயிஸ் பக்கட் / யோகட் வகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 22 | குளிர்பாண வகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23 | தங்குமிட வசதிகள் வழங்கும் இடம் அல்லது வாடிவீடு ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1000.00 |
| 24 | ஹோட்டல் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1000.00 |
| 25 | வெதுப்பகம் (பேக்கரி) ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1000.00 |
| 26 | சிகை அலங்கார நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1000.00 |
| 27 | வாகனங்களை சீராக்கம் (சர்விஸ்) செய்யும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 28 | லொன்டறி ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1000.00 |
| 29 | நெல் ஆலை / அரைக்கும் ஆலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 30 | கொல்லன் பட்டறை ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1000.00 |
| 31 | வைத்திய நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1000.00 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 - v**

ஏதேனும் கைத்தொழில் முயற்சி ஒன்றை நடாத்திச் செல்வதற்கு தொடர்புடைய துணை விதி ஒன்றின் மூலம் 2026 ஆம் ஆண்டிற்கு வினியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் மீது கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vi. 2026 ஆம் ஆண்டிற்கான வாகனங்கள் மற்றும் விலங்குகள் தொடர்பாக வரி விதித்தல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச் சட்டத்தின் 147 ஆம் பிரிவு மற்றும் 148 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 04 ஆம் உப ஆவணத்தின் சரத்துக்களுக்கு ஏற்ப பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக 2026 ஆம் ஆண்டு தொடர்பில் கீழ் அட்டவணையில் 1 ஆம் நிரலில்

குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு வாகனங்கள் மற்றும் விலங்குகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒவ்வொரு நபரும், அவ் அட்டவணையில் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பால் காட்டப்பட்டுள்ள அளவுகளின் படியான வரியொன்று 2026 ஆம் ஆண்டிற்கு விதித்து அறவிடப்படல் வேண்டும் என்று பெல்மதுள்ள பிரதேச சபை பிரேரிக்கின்றது.

**மேற்கூறிய அட்டவணை**

| | ரூபா. சதம் |
|---|---|
| மோட்டர் வண்டி , மோட்டர் கார் , மோட்டர் லெரி , மோட்டர் சைக்கிள் மாட்டு வண்டி, ஜின் ரிக்சோ வண்டி, சைக்கிள் வண்டி அல்லது டிரைசிகள் வண்டியொன்று அல்லாத எல்லா வாகனங்களுக்கும் காலாண்டிற்கு | 25.00 |

ஒவ்வெரு சைக்கிள் அல்லது டிரைசிகள் அல்லது சைக்கிள் கார் அல்லது மாட்டு வண்டிக்காக

| | | |
|---|---|---|
| (அ) வியாபார நோக்கமாக உபயோகிக்கப்படுமாயின் | 18.00 | |
| (ஆ) வியாபார நோக்கம் அல்லாத ஏனைய விவகாரங்களுக்கு உபயோகிக்கப்படுமாயின் | 4.00 | |
| ஒவ்வொரு மாட்டு வண்டிக்காகவும் | 10.00 | |
| ஒவ்வொரு கை வண்டிக்காகவும் | 10.00 | |
| ஒவ்வொரு ரிக்சோ வண்டிக்காகவும் | 7.50 | |
| ஒவ்வொரு குதிரை, மட்டக் குதிரை அல்லது கோவேறு கழுதைக்காகவும் | 15.00 | |
| ஒவ்வொரு யானைக்காகவும் | | 50.00 |

26 அங்குலத்திற்கு மேற்படாத விட்டமுடைய சக்கரங்களை கொண்ட சிறுவர் வாகனங்கள், வீல்பெரோக்கள் அனேகமாக பிரத்தியோக இடங்களில் மாத்திரம் வியாபார நோக்கமாக உபயோகிக்கப்படும் கை வண்டிகள் மற்றும் வியாபார நோக்கமாக உபயோகிக்காத கை வண்டிகள் இந்த வரி விதிப்பிலிருந்து விடுவிக்கப்படும்.

இந்த அட்டவணையில் ''வியாபார நோக்க'' என்பதற்கு விற்பனைக்காக அல்லது ஏனைய முறையில் ஏதாவது தொழில் முயற்சி அல்லது கைத்தொழிலுக்கான எவையேனும் பொருட்களை அல்லது எவையேனும் எழுத்து மூலமான அல்லது அச்சிடப்பட்ட பொருட்களை ஏற்றிச் செல்லுதல் அல்லது போக்குவரத்து செய்தலும் உட்படும்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 – vi**

2026 ஆம் ஆண்டிற்கான வாகனங்கள் மற்றும் தொடர்பான வரி விதித்தல் பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vii. 2026 ஆம் ஆண்டிற்காக விளம்பர அறிவித்தல்களுக்காக கட்டணம் அறவிடுதல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவின் பிரகாரம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு உட்பட்ட பிரதேசம் ஒன்றில் காட்சிக்கு வைக்கப்படும் விளம்பர அறிவித்தல்கள் பேன்பவற்றிற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின் அடிப்படையில் கட்டணம் ஒன்றை 2026 ஆம் ஆண்டு யனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அறவிடப்படல் வேண்டும் என்று பெல்மதுள்ள பிரதேச சபை பிரேரிக்கின்றது.

**மேற்கூறிய அட்டவணை**

| | ரூபா. சதம் |
|---|---|
| 1) சுவர் ஒன்றில் அல்லது பதாகை ஒன்றில் காட்சிப் படுத்தப்படும் நிரந்தர விளம்பரம் ச. அ. ஒன்றிற்கு – வருடம் ஒன்றிற்கு | ரூ. 150.00 |
| 2) டிஜிடல் விளம்பர பதாகை ச. அ. ஒன்றிற்கு | ரூ. 300.00 |
| 3) பேனர் அல்லது கட்டவுட் மூலம் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்கள் | |
| ஒரு மாத காலத்திற்கு ச. அ. ஒன்றிற்கு | ரூ. 75.00 |
| 03 மாத காலத்திற்கு ச. அ. ஒன்றிற்கு | ரூ. 100.00 |
| 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு ச. அ. ஒன்றிற்கு | ரூ. 150.00 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 – vii**

2026 ஆம் ஆண்டிற்கான விளம்பர அறிவித்தல்களுக்கான கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**viii. 2026 ஆம் ஆண்டிற்காக வார சந்தை வரி அறவிடுதல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 119 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வார சந்தை 2026 ஆம் ஆண்டு தொடர்பில் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் வரி அறவிடல் வேண்டும் என்று பெல்மதுள்ள பிரதேச சபை பிரேரிக்கின்றது.

**மேற்கூரிய அட்டவணை**

| | ரூபா. சதம் |
|---|---|
| 1) வார சந்தை கட்டிடத்தின் உள்ளே நிரந்தர வியாபார நிலையம் ஒன்றிற்காக | 250.00 |
| 2) வார சந்தை வளாகத்தினுள் தற்காலிக வியாபார நிலையம் ஒன்றிற்காக | 200.00 |
| 3) வீதியின் இரு புறமும் தற்காலிக வியாபார நிலையம் ஒன்றிற்காக | 180.00 |
| 4) வேறு சிறு வியாபாரிகள் தொடர்பாக (நடமாடும் வேன் / முச்சக்கரவண்டிகள் போன்றவற்றிற்காக) | 150.00 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 – viii**

2026 ஆம் ஆண்டிற்கான வார சந்தை வரி அறவிடுதல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ix. 2026 ஆம் ஆண்டிற்காக அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரி அறவிடுதல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் (ஆ) பந்தியின் பிரகாரம் ''விகிதாசார'' அடிப்படையில் உரிய காணியில் உள்ள கட்டிடங்களினால் சூழப்பட்டிருக்கும் காணியின் அளவு மற்றும் மொத்த காணியின் நிலப்பரப்புக்கு இடையிலான விகிதமானது 1:7 ஆக இருக்க வேண்டும் என்றும் பெல்மதுள்ள பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் தொடர்பாக அக் காணிகளின் நில மூலதன பெருமதியில் நூற்றுக்கு இரண்டு வீதமான (2%) வரியொன்று 2026 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடப்பட வேண்டும் என்று பெல்மதுள்ள பிரதேச சபையானது பிரேரிக்க செய்கின்றது.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 – ix**

2026 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரி அறவிடுதல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**x. 2025 ஆம் ஆண்டிற்காக பிரதேச சபையினால் ஆற்றப்படும் சேவைகள் மற்றும் படிவங்கள் போன்றவற்றிற்காக கட்டணங்கள் அறவிடல் தொடர்பான பிரேரணை**

பெல்மதுள்ள பிரதேச சபை மூலம் ஆற்றப்படும் ஏதேனும் ஓர் சேவை அல்லது வசதிகள் என்பவற்றிற்காக, அவற்றிற்கு விசேடமான கட்டணம் ஒன்று 2026 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்படப்பட்டுள்ளவாறு விதித்து அறவிடப்பட வேண்டும் என்று பெல்மதுள்ள பிரதேச சபையானது பிரேரிக்கின்றது.

| | ரூபா. சதம் |
|---|---|
| 1) மதிப்பீட்டு வரி பெயர் மாற்றம் விண்ணப்பப்படிவக் கட்டணம் | 1000.00 |
| 2) வீதி ரேகை மற்றும் கட்டிட எல்லை கட்டணம் | 1500.00 |
| 3) மதிப்பீட்டு செலுத்தும் நபர் என்பதற்கான சான்றிதழ் வினியோகித்தல் | 1000.00 |
| 4) மின்சார இணைப்பு பெறுவதற்கான சான்றிதழ் வினியோகித்தல் | 500.00 |
| 5) படிவங்களின் பிரதிகளை வினியோகித்தல் | 150.00 |
| 6) 2 வருடங்களுக்கு முந்தைய படிவங்களின் பிரதிகளை தேடுதல் வருடம் ஒன்றிற்கு | 100.00 |
| 7) மதிப்பீட்டு வரி செலுத்தாமை தொடர்பான சான்றிதழ் வினியோகித்தல் | 150.00 |
| 8) அபாயகரமான மரங்களை அகற்றுவதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 1000.00 |
| 9) தண்ணீர் பவுசர் (5000 லீற்றர்) வாடகைக்கு விடல் நாள் ஒன்றிக்கு | 7500.00 |
| 10) விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான கட்டணம் நாள் ஒன்றிக்கு | 5000.00 |
| 11) சபைக்கு சொந்தமான வளாகத்தை வாடகைக்கு விடல் நாள் ஒன்றிக்கு | 7500.00 |
| 12) காணி ஏலவிற்பனை , பிரசித்தி பெற்ற நாடகங்கள் போன்றவற்றிற்காக அனுமதிப்பத்திரம் வழங்கல் | 500.00 |
| 13) மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 25.00 |
| 14) விளம்பரங்கள், பெனர், கட்டவுட் காட்சிப்படுத்துவதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 25.00 |
| 15) நீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக வீதியை பழுதாக்கல் (பரிசீலணை செய்வதற்கான சேவைக் கட்டணம்) | 1000.00 |
| 16) சேதனப் பசளை விற்பனை செய்தல் 1 Kg இற்கு | 12.00 |
| 100 Kg இற்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் | 10.00 |
| 17) கலி பவுசர் சேவை வழங்குவதற்கு (லோட் ஒன்று இற்கு ) | |
| நிறுவனம் ஒன்றிற்கு | 2500.00 |
| வீடு ஒன்றிற்கு | 2000.00 |
| விண்ணப்பப்படிவக் கட்டணம் | 25.00 |
| இறுதி அகற்றுதலிற்கு | 1000.00 |
| சேவைக் கட்டணம் | 1500.00 |
| போக்குவரத்து கட்டணம் கி.மீ. 1 இற்கு ரூபா. 200.00 வீதம் | |

இதற்கு மேலதிகமாக விண்ணப்பதாரருக்கு அகற்றுவதற்கான இடம் ஒன்று இருப்பின் இறுதி அகற்றல் தொடர்பான கட்டணம் 1000.00 விலக்கு அளிக்கப்படும்.

| | |
|---|---|
| 18) தகனசாலை சேவைகளுக்கான கட்டணங்கள் | |
| கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் | 12000.00 |
| கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வெளியே | 15000.00 |
| 19) கட்டடங்களுக்கான விண்ணப்பப்படிவம் வினியோகித்தல் (நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டுப்பாட்டு பிரதேசம் அல்லாத) | 500.00 |
| கட்டடங்களுக்கான விண்ணப்பப்படிவம் வினியோகித்தல் (நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டுப்பாட்டு பிரதேசம்) | 1000.00 |
| 20) நூலக அங்கத்துவ விண்ணப்பப்படிவ கட்டணங்கள் | 10.00 |
| நூலக அங்கத்துவக் கட்டணம் ( பாடசாலை மாணவர்கள் ) | 50.00 |
| நூலக அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளல் (பாடசாலை மாணவர்கள் ) | 15.00 |
| நூலக அங்கத்துவக் கட்டணம் (பராயமடைந்தோர்) | 100.00 |
| நூலக அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளல் (பராயமடைந்தோர் ) | 30.00 |
| நூலக தண்டப் பணம் நாள் ஒன்றிற்கு | 2.00 |

21) சுற்றாடல் அனுமதிப்பத்திர கட்டணங்கள் மற்றும் களப் பரிசீலனை கட்டணங்கள் அறவிடுதலானது மத்திய சுற்றாடல் அதிகார சபை சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைய நடைமுறைப் படுத்தப்படும்.

22) பெல்மதுள்ள பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் பௌதீக வரைபு அனுமதி அளித்தல் செயற்பாடுகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் பௌதீக திட்டமிடல் செயற்பாடுகளுக்கான கட்டணங்கள் அறவிடும் போது 2021.07.08 ஆம் திகதியுடையதும்

2235/54 இலக்கமும் கொண்ட அதி விசேட வர்தமாணப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அட்டவணைகளுக்கு அமைய அறவிடப்படுதல் வேண்டும்.

23) GI-I அல்லது GI-L வடிவிலான கொடிக் கம்பம் ஒன்றை வாடகைக்கு விடல்நாள் ஒன்றிற்கு 30.00

24) கிரிந்தி எல்ல பிரவேச வீதியை பயன்படுத்தி கிரிந்தி எல்ல நீர்வீழ்ச்சியை பார்வையிடுவதற்கு விணியோகிக்கப்படும் நுழைவுக் கட்டணம் அதாவது

| | | |
|---|---|---|
| ஊள்நாட்டு - பராயமடைந்தோர் | | ரூபா. 100.00 |
| | சிறு பிள்ளைகள் | ரூபா. 50.00 |
| வெளிநாட்டவர் | | ரூபா. 1500.00 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 – x**

2026 ஆம் ஆண்டிற்கான பிரதேச சபையினால் ஆற்றப்படும் சேவைகள் மற்றும் படிவங்கள் போன்றவற்றிற்காக கட்டணங்கள் அறவிடல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

x. **2026 ஆம் ஆண்டிற்காக பொதீக வரைபு அனுமதி அளிக்கும் செயற்பாடுகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரகடணப்படுத்தப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உட்படாத பிரதேசங்களுக்கான கட்டணங்கள் அறவிடல் தொடர்பான பிரேரணை**

2026 ஆம் ஆண்டிற்கான பொதீக வரைபு அனுமதி அளிக்கும் செயற்பாடுகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரகடணப்படுத்தப்பட்டுள்ள் 2235/54 இலக்கமும் 2021.07.21 ஆம் திகதியுடையதும் கொண்ட அதி விசேட வர்தமாணப் பத்திரிகை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உட்படாத பிரதேசங்கள் தொடர்பாக 2418/03 இலக்கமும் 2025.01.06 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ள iv(அ) என்ற பிரிவு – மாகாண சபை அறிவித்தல் துணைவிதிக்கு ஏற்ப கட்டணங்கள் அறவிடுதல்கள் மேற்கொள்ளப்படும்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 – xi**

2026 ஆம் ஆண்டிற்காக பொதீக வரைபு அனுமதி அளிக்கும் செயற்பாடுகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரகடணப்படுத்தப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உட்படாத பிரதேசங்களுக்கான கட்டணங்கள் அறவிடல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

xii. **2026 ஆம் ஆண்டிற்காக குப்பைகள் கழிவுகள் அகற்றுதல் தொடர்பாக கட்டணங்கள் அறவிடல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் ix(ஆ) உட்பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள துணை விதியின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட 2274 ஆம் இலக்கமும் 2022 ஏப்ரல் 01 ஆம் திகதியுமுடைய வர்த்தமாணப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள துணை விதியின் பிரகாரம் 2026 ஆம் ஆண்டு தொடர்பில் உக்கும் மற்றும் உக்காத குப்பைகள் மற்றும் கழிவுகள் சேகரித்தல் தொடர்பிலான கட்டணங்களை அறவிடுவதற்கு பெல்மதுள்ள பிரதேச சபை பிரேரிக்கின்றது.

| நாளாந்த குப்பை கழிவுகளின் அளவு | மாதாந்தம் அறவிடப்படும் கட்டணம் ரூபா. சதம் |
|---|---|
| 10 Kg – 15Kg | 1,000.00 |
| 16 Kg – 21 Kg | 3,000.00 |
| 22 Kg – 27 Kg | 5,000.00 |
| 28 Kg – 32 Kg | 7,000.00 |
| 33 Kg – 38 Kg | 10,000.00 |
| 39 Kg – 43 Kg | 12,000.00 |
| 44 Kg – 49 Kg | 15,000.00 |
| 50 Kg – 55 Kg | 18,000.00 |
| 56 Kg – 60 Kg | 20,000.00 |
| 61 Kg – 66 Kg | 22,000.00 |
| 67 Kg இற்கு மேற்படும் ஒவ்வொரு 5 Kg இற்கும் | 2,000.00 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07 – xii**

2026 ஆம் ஆண்டிற்கான குப்பைகள் கழிவுகள் அகற்றுதல் தொடர்பாக கட்டணங்கள் அறவிடல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

xiii. **2026 ஆம் ஆண்டிற்காக வார சந்தை அருகில் உள்ள வாகன தரிப்பிடத்திற்கான கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பான பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள 1865 இலக்கமும் 2014 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதியும் கொண்ட வர்தமாணப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள வாகனங்கள் நிறுத்தி வைத்தல் தொடர்பாக இடங்களை ஒதுக்கி வைத்தல் மற்றும் வாகனங்களில் இருந்து கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பான துணை விதியின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு யனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து அறவிட வேண்டுத் என்று பெல்மதுள்ள பிரதேச சபை பிரேரிக்கின்றது.

மேற்கூறிய அட்டவணை

1) பாடசாலை பஸ் வண்டி ஒன்றிற்கு – நாள் ஒன்றிற்கு ரூபா. 50.00

2) பாடசாலை வேன் வண்டி ஒன்றிற்கு – நாள் ஒன்றிற்கு ரூபா. 40.00

| | மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா. சதம் | முதல் மணித்தியாலம் இற்கு மேற்படும் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா. சதம் |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | 10.00 | 10.00 |
| முச்சக்கரவண்டி | 20.00 | 10.00 |
| கார் / வேன் | 30.00 | 10.00 |
| பஸ் / லொரி | 50.00 | 10.00 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த கட்டணங்கள் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூ. 20.00, முச்சக்கரவண்டிகளுக்கு ரூ. 50.00, கார் / வேன் ரூ.60.00, பஸ் / லொரி ரூ. 100.00 ஆக திருத்தப்படல் வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்ஞுல் தசனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 07 – xiii**

இதன் அடிப்படையில்

| | மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா. சதம் | முதல் மணித்தியாலம் இற்கு மேற்படும் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா. சதம் |
|---|---|---|
| மோட்டார் சைக்கிள் | 20.00 | 10.00 |
| முச்சக்கரவண்டி | 50.00 | 10.00 |
| கார் / வேன் | 60.00 | 10.00 |
| பஸ் / லொரி | 100.00 | 10.00 |

2026 ஆம் ஆண்டிற்கான வார சந்தை அருகில் உள்ள வாகன தரிப்பிடத்திற்கான கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பான பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

08. GIS தொழிழ்நுட்பம் மூலம் வரைபடங்கள் தயாரிக்கப்பட்ட 418 வீதிகளை 2427/33 ஆம் இலக்கம் உடைய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இதுவரை வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு உள்ள 513 வரைபடங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக அரச அச்சகத்திற்கு அனுப்புவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த ஆவணத்தில் காணப்படும் வீதிகளின் பெயர்களில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் அவர்கள் தெரிவித்தார்.

இந்த விடயங்களை ஆராய்வதற்கு பொது சபையை செயற்பாட்டுக் குழுவாக கருதவேண்டும் என்ற பிரேரணையை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் முன்வைக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் ஆமோதித்தார்.

அதன்போது இது பற்றிய தெளிவூட்டல்கள் பிரதேச சபை செயலாளர் மற்றும் விடய உத்தியோகத்தரினால் முன்வைக்கப்பட்டன.

கருத்து தெரிவிக்கையில், இந்த வீதிகள் வர்த்தமாணப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் இவை பிரதேச சபைக்கு உரித்தான விதி என்ற பெயர்ப் பலகை பெருத்துவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

செயற்பாட்டுக் குழவை பொது சபையாக கருதவேண்டும் என்ற பிரேரணையை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் முன்வைக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் ஆமோதித்தார்.

**முடிவுகள் இலக்கம் 08**

வீதிகளின் பெயர்களில் உள்ள திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் 513 வீதிகளையும் அரச அச்சகத்திற்கு அனுப்பி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கும், உள்ளடக்கப்படாத வீதிகளை மீண்டும் அளவைகள் செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

09. தேசிய இளைஞர் மன்றம், கொடகம, பெல்மதுள்ள பயிற்சி நிலையத்தில் தொழிநுட்ப (NVQ 4) கணினி பயிற்சி பாடநெறியை பயின்று பூர்த்திசெய்துள்ள தெமுவாத, இறக்குவானை விலாசத்தில் வசிக்கும் செல்வி. கே.எம். ஹசினி பிரமோதா என்பவருக்கு எங்கள் நிறுவனத்தில் 06 மாதங்களுக்கு கணினி பிரிவில் மேலதிக பயிற்சி வழங்க சந்தர்ப்பம் வழங்கவதற்காக விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கை 04/2017(ii) இற்கமைய நாள் ஒன்றுக்கு 1000.00 ரூபாய் தொகையை செலுத்துவதற்கும் பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 09**

தெமுவாத, இறக்குவானை விலாசத்தில் வசிக்கும் செல்வி. கே.எம். ஹசினி பிரமோதா என்பவருக்கு எங்கள் நிறுவனத்தில் 06 மாதங்களுக்கு கணினி பிரிவில் மேலதிக பயிற்சி வழங்க சந்தர்ப்பம் வழங்கி அரச நிர்வாக சுற்றறிக்கை 04/2017(ii) இற்கமைய நாள் ஒன்றுக்கு 1000.00 ரூபாய் தொகையை செலுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களின் பிரேரணைகள்**

01. போபெத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் போபெத்த சந்தியின் அருகில் தொடக்க இடத்தில் உள்ள வடிகாலை கொன்கிறீட் செய்து திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசாந்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், போபெத்த சந்தியில் வீதி அளக்கப்பட்ட போதிலும், அங்கு வடிகால் அமைக்கும் போது போபெத்த சந்தியில் இருந்து கீழ் நோக்கி செல்லும் வீதியில் குருகிய இடத்தில் வடிகால் அமைத்தால் மழை காலங்களில் அவ்விடத்தில் அனைத்து நீர் செல்லும் வழிகளும் இந்த வடிகாலின் ஊடாக செல்வதால் இந்த குறுகிய வீதி உடைவதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 10**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எச். ஞானலதா ஹப்புதான்திரி அவர்களின் பிரேரணைகள்**

01. ஹெட்டிகந்த பாடசாலைக்கு அருகில் இருந்து நாரங்கொட மேல்பிரிவு வரை ஓடும் ''ரிங்கானா ஓடை'' அருகில் உடைந்த நிலையில் காணப்படும் போக்குவரத்திற்கு மிகவும் கடினமான நிலையில் காணப்படும் மழைக் காலங்களில் இந்த வீதியின் ஊடாக எந்த விதத்திலும் பயணஞ் செய்ய முடியாது. இதை புனரமைப்பு செய்வதற்காக 02 அடி விட்டமும் 04 அடி நீளமும் உடைய குழாய்கள் 03 பயன்படுத்தி, வீதியை கற்கள் பாவி கொங்கிறீட் இட்டு பாதுகாப்பு வேலி அமைத்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 11**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. நாரங்கொட அணைக்கட்டு அருகில் திலெனதரு விளையாட்டு சங்கத்தின் இளைஞர் யுவதிகள் விளையாடும் விளையாட்டு மைதானம் மின் ஒளி இன்றி காணப்படுவதாகவும், அவர்களுக்கு வெலிபோல் ஒன்றின் அவசியம் இருப்பதாக விடுக்கப்பட்டு இருக்கும் கோரிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கு இந்த தேவைகளை பூர்த்திசெய்து கொடுக்கும்படி பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், வீதி விளக்குகள் வழங்கும் போது 37 பிரிவுகளுக்கும் சமமாக 03 மின்குமிழ்கள் வீதம் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு பகிர்ந்து அளிக்குமாறும் அப்போது உறுப்பினர்களுக்கு அவர்களுக்கு தேவையான இடங்களில் (அதாவது பழுதுபார்க்க வேண்டிய நிலையில் காணப்படும் இடங்கள்) மின்குமிழ்களை பொருத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்க முடியுமானால் மற்றும் ஏதேனும் நிதி ஒதுக்கங்கள் வழங்குவதற்கு முடியுமானால் அது உறுப்பினர்களின் அடையாளத்தை பாதுகாக்கும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 12**

ஒதுக்கங்களின் நிலையை கருத்தில் கொண்டு இந்த விடயத்தை மேற்கொள்வதற்கும், அப்படி முடியாத சந்தர்ப்பத்தில் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. கிரிவந்தல ஊரில் சிங்கள- தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் குடிநீர் பிரச்சினை காரணமாக மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். நீர் மூல ஆதாரங்கள் இருந்தும் மேல் குட்டபிட்டியில் இருந்து கிரிவந்தல வரை பொது நீர் இணைப்பு வழங்கப்பட்டு இருந்த போதிலும் தற்போது அது செயலற்றுக் காணப்படுகின்றது. இதனால் இவர்களுக்கு குடிநீர் வசதிகள் இன்றி தவிப்பதாக தெரிவித்து உள்ளனர். இந்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்துமாறும், இதை நிவர்த்தி செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 13**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய இந்த விடயத்தை செய்வதற்கு உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. இடங்கொடை ஹெலஉட வீதி கிரிவந்தல வரை உள்ள 150 மீற்றர் அளவிற்கு கற்கள் பாவி கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 14**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

05. நாரங்கொடை இல.06 விஹாரை சந்தியில் மேல் பகுதி திரு. திலகசிறி என்பவரின் வீட்டின் அருகில் இருந்து 300 மீற்றர் அளவிற்கு கற்கள் பாவி கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 15**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ஏம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட அவர்களின் பிரேரணைகள்**

01. குறைந்த வருமானம் பெரும் நிரந்தர தொழில் இல்லாத குட்டபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் வாழும் திரு. துசித ஜயவிக்கரம என்ற நபருக்கு மலசலகூடம் ஒன்றை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 16**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் இடத்தை பரிசீலித்து அறிக்கை ஒன்று பெற்றுக்கொள்வது உகந்தத என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. வித்தியாலய வீதி, வீதியில் உள்ள குழிகள் மீள்நிரப்பு செய்து மூடுவதற்கு உரிய நிறுவனங்களை தெளிவுபடுத்தித் மாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 17**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய இந்த விடயத்தை செய்வதற்கு உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**v. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த அவர்களின் பிரேரணைகள்**

01. சதிகந்த பிரதான வீதியில் திரு. ரீ. நிமல் அவர்களின் வீட்டின் அருகில் உள்ள வடிகால் குழாயை பெரிதாக்குவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்தால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 18**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. வலவ்வத்த நுழைவு வாயிலில் நீர் ஓடைக்கு வடிகால் குழாய் ஒன்றை அமைப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 19**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. தேயிலை கொழுந்து கொண்டு செல்வதற்காக விசேடமாக பயன்படுத்தப்படும் குட்டபிட்டிய உடதுல் பிரிவில் இருந்து செல்லும் சுதுவெலிக வீதியை விரைவாக திருத்தித் தருமாறு பிரேரிக்கின்றேன்.

கருத்துத் தெரிவிக்கையில், இந்த வீதியில் ½ Km அளவிற்கு பொதுமக்களின் பங்களிப்புடன் வீதி திருத்தப்படுவதோடு 1 Km அளவிற்கு கற்கள் பதியப்பட்டு உள்ளதம் பொதுமக்களின் பனத்தில் ஆகும். இந்த விதியில் நாளாந்தம் அதிக அளவில் தேயிலை கொழுந்து கொண்டு செல்லப்படுவதால், வீதியானது உடைந்து காணப்படுவதால் தேயிலை கொழுந்து கொண்டு செல்லும் லொறிகள் பயனிப்பது இல்லாததன் காரணத்தினால் இந்த தெயிலை கொழுந்து லொறிகளுக்கு கொண்டு செல்ல வேண்டி உள்ளதால் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் இந்த விதியை திருத்தித் தர முடியுமானால் பொதுமக்களும் தமது பங்களிக்பை தருவதாக கூறியுள்ளனர் உன்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் கே. சாந்த குமார குடாவத்த அவர்கள் தெரிவித்தார்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 20**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்களின் பிரேரணைகள்**

01. நாரங்கொடை கிராம உத்தியோகத்தர் பிரிவில் நாரங்கொடை மற்றும் தெஹிகஹதெனிய இணைக்கும் வீதியில் கருவா துண்டு கெதியில் உள்ள நீர் ஓடைக்கு குறுக்காக வடிகால் குழாய் இட்டு கொன்கிறீட் இடுவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. வீ.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. குட்டிகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் இலக்கம் 06 பகுதியில் கீழ் குறுக்கு வீதியில் தண்ணீர் வடிந்து செல்லும் இடத்திற்தை வடிகால் குழாய் இருவதற்கு பிரேரிக்கின்றேன். (ஒரு இலட்சம் மட்டும்)

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. வீ.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 22**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. குட்டபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் வத்தே பங்குவ வடவல வீதியில் உள்ள 30 அடிகள் நீளமான பாலத்தின் பாதுகாப்பு வேலியை அமைப்பதற்கு பிரேரிக்கின்றேன். (150,000.00 வரை)

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. வீ.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 23**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. ஒவ்வொரு பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் பிரதேச சபை நிதியத்தில் இருந்து ரூபா. 50,000.00 தொகை ஒன்றை ஊரில் உள்ள சிறு அளவிலான திட்டங்களை செய்வதற்கு ஒதுக்கி தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. வீ.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 24**

பிரதேச சபை சட்டத்திற்கு ஏற்ப நிதி ஒதுக்குவதற்கு இயலுமை இல்லை என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. இராஜரட்னம் புவனேஸ்வரி அவர்களின் பிரேரணைகள்**

01. கோயிலில் இருந்து தோட்ட குடியிருப்புக்களின் முன்னால் உள்ள வீதிக்கு அருகில் உள்ள சுமார் 15 அடிகள் உயரமுள்ள மண் திட்டு மண்ணரிப்பக்கு உள்ளாவதால் 200 மீற்றர் அளவிற்கு பக்க மதில்சுவர் ஒன்றை நிர்மாணித்தத் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 25**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ஆர். புவனேஸ்வரி அவர்கள் பி.ப. 1.30 மணியளவில் சபையில் இருந்து வெளியேரினார்.

**viii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எச்.எம். சரத் உசான் மஹனாம அவர்களின் பிரேரணைகள்**

01. பஹல ஹகமுவ கூட்டுறவு நிலையத்திற்கு அருகில் உள்ள வடிகால் தொகுதியை புனர்நிர்மாணம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

02. குபிதான் ஜயரத்ன வீதியின் தொடக்கத்தில் இருந்து வே ஆறு வரை உள்ள வீதியின் வடிகால் தொகதியை புனர்நிர்மாணம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.
03. பேரலந்த பாடசாலைக்கு அருகில் பிதான வீதிக்கு குறுக்காக போடப்பட்டுள்ள வடிகால் தொகுதியில் உள்ள வடிகால் குழாய்கள் மூடப்பட்டு உள்ளதால் அவற்றை புனர்நிர்மாணம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

**முடிவுகள் இலக்கம் 26**

மேற்குறிப்பட்ட பிரெரணைகளை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எச்.எம். சரத் உசான் மஹனாம அவர்களினால் திரும்பப் பெறப்பட்டன.

**ix. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி அவர்களின் பிரேரணைகள்**

1. கல்லெபிட்ட பொது மயானபூமியை சுத்தம் செய்வதற்கு பிரதேச சபையின் புல் வெட்டும் இயந்திரத்தை பயன்படுத்தி சுத்தம் செய்து முன்பக்கம் பக்க மதில் ஒன்றை நிர்மாணித்து முழு பூமியை 02 அடிகள் அளவிற்கு மண் நிரப்புவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் ஏ.டப். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், அதிகமானோர் இந்த மயானபூமியை பயன்படுத்துவதால் இந்த மயானபூமிக்கு பெயர்பலகை ஒன்று பொருத்துவதற்கும், 03 அடிகள் உயரமான பக்க மதில் ஒன்றை நிர்மாணித்து அதை நிரப்புவதன் மூலம் முழு பூமியிலும் பூதவுடல்களை புதைக்க தேவையான இடம் கிடைக்கும் என்று என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசாந்த புத்தாரச்சி அவர்கள் கூறினார்.

**முடிவுகள் இலக்கம் 27**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் புல் வெட்டும் இயந்திரத்தை பயன்படுத்தி சுத்தம் செய்வதற்கும், பிரதேச சபையிக் செலவில் பக்க மதிலை நிர்மாணித்து மழு பூமியையும் 02 அடிகள் அளவிற்கு மண் நிரப்புவதற்கு முடியுமாயின் அதை செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. ஏதிர்வரும் காலங்களில் அனைத்து விஹாரைகளிலும் கடின பிங்கம நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதால் அவ் வீதிகளில் உள்ள வீதி விளக்குகளை திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் ஏ.டப். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 28**

வீதி விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் அவ் வீதிகளில் உள்ள வீதி விளக்ககளை திருத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ பிரதேச சபை தவைலர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. பிரதான அமைச்சு மற்றும் உள்ளூராட்சி வீதி அமைச்சு மூலம் இலக்கம் 01 - இலக்கம் 15 வரை ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்காக ரூபா. 20 இலட்சத்துக்கு குறைவான பெருமதியுடைய திட்டங்கள் விலைகோரல் வழிகாட்டலுக்கு ஏற்ப பொதுமக்களை அடிப்படையாகக் கொண்ட சங்கங்களை தேர்ந்தெடுத்து ஒப்பந்தங்களை வழங்குவதற்கான அனுமதியை பெறுவதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 29**

| தொ. இல | திட்டத்தின் பெயர் | அனுமதி வழங்கப்பட்டுள்ள ஒதுக்கம் ரூபா. சதம் |
|---|---|---|
| 01 | புலத்வெல்கொட வீதியை அபிவிருத்தி செய்தல் | 876598.34 |
| 02 | மிதலன தெபுன்வல கிராமத்திற்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்தல் | 1165894.46 |
| 03 | தேவாலெகம சிங்கப்புலிகந்த திரு. சஞ்ஜீவவின் வீட்டிற்கு அருகில் இருந்து தும்மல கஸ்தென்ன வரையிலான வீதியை அபிவிருத்தி செய்தல் | 1907311.64 |
| 04 | பாதகட பேக்கரி மேல் வீதியை அபிவிருத்தி செய்தல் | 1103219.55 |
| 05 | வெலிமலுவ பிடகும்புர கிராமத்தன் ஊடாக எதுகல ஆராணய வரை உடைந்து காணப்படும் வீதியை அபிவிருத்தி செய்தல் | 1903386.57 |
| 06 | சேபாலிகா கடை அருகில் இருந்து மேல் லயன் பின்புறம் வரை உள்ள வீதியை அபிவிருத்தி செய்தல் | 1784202.02 |
| 07 | நீலகம தோட்டம் கட்டங்கே கஹவத்த கீழ் பிரிவில் இருந்து கட்டங்கே மேல் பிரிவு வரையிலான வீதியை அபிவிருத்தி செய்தல் | 1459367.91 |
| 08 | கெடேதென்ன கழிவு முகாமை நிலையத்தின் வடிகால் தொகுதியை அபிவிருத்தி செய்தல் | 1330158.28 |
| 09 | பெல்மதுள்ள கொம்போஸ்ட் நிலையத்தின் பிரவேச வீதியை அபிவிருத்தி செய்தல் | 1451888.27 |
| 10 | வடவல இமேகெலே வரையிலான வீதியை அபிவிருத்தி செய்தல் | 1460783.04 |
| 11 | சிங்கப்புலிகந்த அனை வீதியின் பாலத்தின் இரு புரங்களையும் அபிவிருத்தி செய்தல் | 1461176.99 |
| 12 | பண்டாரநாயக்கபுர ஆயுர்வேத கீழ் வீதியில் தற்போது கொங்கிறீட் இடப்பட்டுள்ள இடத்தில் இருந்து முன்நோக்கி கொங்கிறீட் செய்தல் | 974011.67 |
| 13 | வெலிமலுவ கிராமத்திற்கு பிரவேசிக்கும் தொடம்கஹ ஓடை வீதியை அபிவிருத்தி செய்தல் | 1903711.41 |
| 14 | பொரோனுவ தோட்டம் மேல் பிரிவில் சுகாதார வசதிகள் (புதிய மலசலகூடங்கள்) நிர்மாணித்தல் | 1139244.04 |
| 15 | இரம்புக்கந்த தோட்டம் ஹப்புருகல பிரிவில் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | 847888.02 |

ரூபா. 20 இலட்சத்துக்கு குறைவான பெருமதியுடைய திட்டங்கள் விலைகோரல் வழிகாட்டலுக்கு ஏற்ப பொதுமக்களை அடிப்படையாகக் கொண்ட சங்கங்களை தேர்ந்தெடுத்து ஒப்பந்தங்களை வழங்குவதற்கு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. இலக்கம் 01- 06 வரை பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கான ஒப்பந்த காலத்தை நீடித்து கொள்வதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 30**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களின் காலத்தை நீடிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

| தொ. இல | திட்டத்தின் பெயர் |
|---|---|
| 01 | தேவாலெகம சிங்கப்புலிகந்த திரு. சஞ்ஜீவவின் வீட்டின் அருகில் இருந்து தும்லகஸ்தென்ன வரையிலான வீதியை கொங்கிறீட் இடல் |
| 02 | மிதலன தெபுன்வல கிராமத்திற்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்தல் |
| 03 | கெடேதென்ன கழிவு முகாமை நிலையத்தின் வடிகால் தொகுதியை அபிவிருத்தி செய்தல் |
| 04 | சிங்கப்புலிகந்த அனை வீதியின் பாலத்தின் இரு புரங்களையும் அபிவிருத்தி செய்தல் |
| 05 | வடவல இமேகெலே வரையிலான வீதியை அபிவிருத்தி செய்தல் |
| 06 | புலத்வெல்கொட வீதியை அபிவிருத்தி செய்தல் |

03. 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கங்கள் ஒதுக்கப்படும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு விலைகோரல் குழவாக பொதுச் சபையை கருதி அனுமதி அளிக்கப்படும் விலைகோரல் குழு மற்றும் 01– 04 வரை பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொழிநுட்ப சேவைகள் குழு ஒன்றை அமைப்பது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 31**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான விலைகோரல் குழு மற்றும் தொழிநுட்ப சேவைகள் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**விலைகோரல் குழு**

கௌரவ தலைவர் - திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள்
செயலாளர் - திரு. ஆர்.கே. கபில ஜகத் குணதிலக
தொழிநுட்ப உத்தியோகத்தர் - திரு. எச். ஜயசிங்க
உறுப்பினர்கள் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
- திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார
- திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர
- திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி
- திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
- திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன

**தொழிநுட்ப சேவைகள் குழு**

| தொடர் இல | பெயர் | பதவி மற்றும் நிலையம் | குழுவில் பதவி |
|---|---|---|---|
| 01 | திரு. டப்.ஏ.டப்.எல். ஹேமான் | உள்ளூராட்சி பெறியிலயாளர், உள்ளூராட்சி மன்ற தினைக்களம் - சப்ரகமுவ மாகான சபை | தலைவர் |
| 02 | திரு. எம்.டி.எஸ். பிரனாந்து | பிரதான கணக்காளர் , உள்ளூராட்சி மன்ற தினைக்களம் - சப்ரகமுவ மாகான சபை | குழு உறுப்பினர் |
| 03 | திரு. எஸ்.என்.கே.பீ. நாராயன | தொழிநுட்ப உத்தியோகத்தர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் | குழு உறுப்பினர் |
| 04 | திரு. பி.எம்.எஸ். இரோசன் | தொழிநுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை , பெல்மதுள்ள | குழு உறுப்பினர் |

04. இலக்கம் 01-14 வரை பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 31**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

| தொடர் இல | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டு பெருமதி ரூபா. மில்லியன் |
|---|---|---|
| 01 | தொபகஸ்வின்ன சர்வோதயவிற்கு பிரவேசிக்கும் வீதியில் இருந்து முன்னால் தொபகஸ்வின்ன பாடசாலைக்கு அருகே வரை கொங்கிறீட் செய்தல் | 2.00 |
| 02 | பிரதான வீதியில் இருந்து (மார்ஷெல்வெலி வத்த) திரு. தொன் செனைவிரத்னவின் வீட்டிற்கு அருகில் உள்ள வளைவு வரை வீதியில் இருபுறமும் வடிகால் தொகுதியை அமைத்து கார்பட் செய்தல் | 2.00 |

| | | |
|---|---|---|
| 03 | புலத்வெல்கொட வீதியில் வலது புறம் உள்ள நாலக மெணிக் வீடுவரை செல்லும் வீதியில் திரு. தர்மரக்பிதவின் வீட்டின் அருகில் புதையுண்டு காணப்படும் வீதியின் இருபுறமும் வடிகால் தொகுதியை அமைத்து கொங்கிறீட் செய்தல் | 1.00 |
| 04 | பேக்கரி மேல் வீதிக்கு பிரவேசிக்கும் வீதி கொங்கிறீட் செய்தல் இந்த வீதி மாகான சபை வீதி அபிவிருத்தியின் கீழ் ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்து உள்ளன. அதனால் இந்த பிரேரணைக்கு பதிலாக திரு. ஜினதாச தென்னகோன் வீதியின் பிரவேச பகுதியில் பக்க மதில் இடல் மற்றும் கொங்கிறீட் செய்தல் என்ற பிரேரணையை முன்வைக்கின்றேன். | 2.00 |
| 05 | பண்டாரவத்த தெனவக இணைக்கும் வீதியில் திரு. ஆரோன்சிஞ்ஞோவின் வீட்டின் அருகில் இருந்து தெனவக பாதகட வரை வீதியின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல் | 1.5 |
| 06 | சுன்னஸ்கம வேவெல்தொல அனை அருகில் இருந்து ஹேன்யாய வரையிலான வீதியின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் பக்க மதில் அமைத்தல் | |
| 07 | பொல்எத்தென்ன கிராமத்தின் நுழைவு பாலம் விரிவாக்கி அபிவிருத்தி செய்தல் | 2.00 |
| 08 | கிரிவெல்தெனிய விஹாரைக்கு அருகில் இருந்து (250m) தூரத்திற்கு கற்கள் பாவி தார் இடுதல் | 1.5 |
| 09 | சமனல உயன பிரதேசத்தின் பிரவேச வீதி தார் இட்டு மற்றும் வீதியின் பக்க வடிகால்கள் அமைத்து அபிவிருத்தி செய்தல் | 1.5 |
| 10 | புதுலென திரு. ஜயதிலகவின் கடைக்கு அருகில் இருந்து திரு. சரத்தின் வீடு வரை கொங்கிறீட் செய்தல் | 2.00 |
| 11 | துர்மரக்பித வீதி அனை வரை வீதியின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஓடையை அபிவிருத்தி செய்தல் | 1.00 |
| 12 | மேல் போபிட்டிய பாமுவத்தி வீதியை முன்நோக்கி அபிவிருத்தி செய்தல் | 2.00 |
| 13 | உடகங்கொட வீதியை கொங்கிறீட் செய்தல் | 2.00 |
| 14 | திப்பிட்டிகல ஸ்தாலவத்த வீதியில் கொங்கிறீட் செய்யப்படாத எஞ்சிய பகுதியை கொங்கிறீட் செய்தல் மற்றும் பக்க வடிகால் அமைத்தல் | 1.00 |

05. தற்காலின சாரதி திரு. ஓ.வீ. ஜகத்தின் சேவை ஒப்பந்த காலம் 2025.10.15 ஆம் திகதியுடன் முடிவடைவதால் அக் கால எல்லையை ஒரு வருடத்திறடகு நீடிப்பது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 33**

திரு. ஓ.வீ. ஜகத்தின் சேவை ஒப்பந்த காலம் 2025.10.15 ஆம் திகதியில் இருந்து 2026.10.14 ஆம் தகதி வரை ஒரு வருடத்திறடகு நீடிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களின் பிரேரணைகள்**

01. தேவாலெகம பிரிவில் சிங்கப்புலிகந்த வீதியில் திரு. பி. சமன்தவின் வீட்டின் இருகில் உள்ள வீதியில் 1.5 அடி அளவிலான பகுதி ஒன்று புதையுண்டு காணப்படுவதால் வீதியில் போக்குவரத்து குறைந்து உள்ளது. விரைவாக அபிவிருத்தி செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 34**

மேற்கூறிய பிரேரணை தொடர்பாக தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபை ஊடாக செய்ய முடியுமான அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களின் பிரேரணைகள்**

01. எரிபொருள் கொடுப்பனவு மற்றம் தொலைபேசி கொடுப்பனவு தொடர்பாக கலந்தாலோசித்து பொறிமுறை ஒன்றை தயாரித்துத் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்தின அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், எரிபொருள் கொடுப்பனவு மற்றம் தொலைபேசி கொடுப்பனவு என்பன முன்பை போல் உறுப்பினர் கொடுப்பனவுடன் சேர்த்து வழங்குவதாயின் ஆறுதலாக இருக்கும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், ரூபா. 8000.00 கொடுப்பனவு அனுமதி பெறப்பட்டு இருப்பினும், சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்காக தால்கள் நிரப்ப வேண்டி ஏற்படுமேயானால் தான் அதற்கு மிகுந்த வெறுப்பை இந்த நேரத்தில் தெரிவிப்பதாகவும், இதனால் சபை உறுப்பினர்கள் தரம் தாழ்த்தப்படுதலுக்கு உள்ளாவதால், முன்னர் வழங்கியது என்றால் ஏன் வழங்க முடியாது என்ன காரணம் என்று தேடிப்பார்க்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 35**

2025.08.25 ஆம் திகதியுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்தமானப் பத்திரிகை இலக்கம் 2451/02 இல் குறிப்பிடப்பட்டு உள்ளதன் பிரகாரம் ரூபா. 8000.00 இற்கு உட்பட்டு கொடுக்கப்படும் சார்புக் கொடுப்பனவு, பிரயானக் கொடுப்பனவு என்பன வவுசர்கள் சமர்ப்பிப்பதன் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இந்த வவுசர்களை நிரப்புவது சபை உறுப்பினர்களுக்கு பிரச்சினையாக காணப்படுவதால் ரூபா. 8000.00 கொடுப்பனவு உறுப்பனர் கொடுப்பனவுடன் சேர்த்து கொடுப்பதற்கு கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதியை பெறுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**01. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள்**

2025.09.12 ஆம் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை குழுவின் கூட்ட அறிக்கை, 2025.09.22 ஆம் திகதி நடைபெற்ற பொது வசதிகள் குழுவின் அறிக்கை, 2025.09.24 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் குழுவின் அறிக்கை, 2025.09.22 ஆம் திகதி நடைபெற்ற நூலக ஆலோசனை குழுவின் அறிக்கை என்பன சபைக்கு முன்வைக்கப்பட்டன.

கருத்து தெரிவிக்கையில், 2025.09.24 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் குழுவின் அறிக்கையில் முடிவுகள் இலக்கம் 09 திருத்தங்களுக்கு உட்பட வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் தெரிவித்தார்.

அதாவது, வாகன விடய உத்தியோகத்தர் திருமதி. எச். இஷாரா மதுஷானியின் கோரிக்கைக்கு ஏற்ப வாகனங்களின் பழுதுபார்த்தல்கள் நடவடிக்கைகள் செயலாளர், தலைவர், கமிட்டி தலைவர்களை தெளிவுபடுத்தி தொழிநுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வை மற்றும் பரிந்துரைகளுக்கு ஏற்ப பிரதேச சபை உறுப்பனர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் வாகளங்கள் கழற்றப்பட்டு குறைபாடுகள் இணங்கண்டு மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எம். பிரதீபா இதுமிணி குலரத்ன பி.ப. 02.00 மணிக்கு சபையில் இருந்து வெளியேறினார்.

02) பெறுகைகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கைகள், சேகரிக்கப்பட்ட வருமானங்கள் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌலவ சபைக்கு முன்வைத்தல் - இல்லை
03) வேறு விடயங்கள்

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன**

குழு அறிக்கைகள் பொது சபைக்கு முன்வைத்தல்கள் கால தாமதம் ஆகுதல், முடிவுகளை அமுல்படுத்துவதில் உள்ள கால தாமதங்கள் மூலம் பிரதேச சபையினால் ஆற்றப்படும் சேவைகளில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் குழு அறிக்கைகள் முன்வைப்பது தொடர்பாக முறையான நடைமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று தெளிவுபடுத்தனார்.

வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவில் தன்னால் கூறப்பட்ட விடயம் ஒன்று தொடர்பாக உரிய நபருக்கு அவருக்கு எதிராக கருத்துக்கள் தெரிவித்த விதம் பற்றி குழுவின் உறுப்பினர் ஒருவர் மூலம் தெரிந்துகொண்டு உள்ளார். இதற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் ஒருவரும் சம்பந்தப்படவில்லை என்பது எனது அபிப்பிராயம் ஆகும். இது தனிப்பட்ட ரீதியில் பாதிக்கும் காரணம் ஒன்றாக அமைந்துள்ளது. குழு முடிவுகள் பொது முடிவுகள் ஆவதால் தனிப்பட்ட ரீதியான கருத்துக்களாக சமூகத்திற்கு செல்வது பிழையான நிலையை குறிக்கும். கட்டாயமாக இந்த விடயம் திருத்தப்பட வேண்டும்.

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு தகாத வார்த்தைகளால் திட்டுவது 2025.10.02 ஆம் திகதி அல்லது அதற்கு கிட்டிய திகதி ஒன்றில் பிரதேச சபைக்கு வந்து வெளியேறும் போது சாரதி லஹிரு செலுத்தும் கெப் வண்டியின் பின்புற ஆசனத்தில் அமர்ந்து இருந்த போது பிரதேச சபையின் நீதிமன்ற விடய உத்தியோகத்தர் அந்த கெப் வண்டியில் ஏறி சிறிது நேரத்தில் சாரதியுடன் அன்றைய தினம் சபை அலுவல் ஒன்றுக்கு வருகைதந்த எனக்கும் கொரவ பிரதெச சபை உநுப்பினர் திரு. கயான் அவர்கள் வசிக்கும் பிரதேசத்தின் பெயரைக் பாவித்து தகாத வர்க்தைகளை பிரயோகித்து எங்கள் இருவரையும் திட்டினர். அதற்கு நான் தலையிடாததன் காரணத்தினால் நீளாமல் முடிவடைந்தது. இது எந்தவிதத்திலும் அனுமதிக்க முடியாதது ஒன்றாகும். நான் மற்றும் ஏனைய பிரதேச சபை உறுப்பினர்களும் பிரதேச சபைக்கு வருகைதருவது தேவைகளை பூர்த்திசெய்துகொள்ளும் என்னத்துடன் மட்டுமே ஆகும். இந்த நிறுவனத்தின் ஊழியர்கள் கடமை புரிவது பொதுமக்களின் தேவைகளை பூர்த்திசெய்து கொடுக்கும் குறிக்கோலுடன் ஆகும். அதனால் அவருடைய அந்த செயலானது கீழ்தரமான வெட்கப்படவேண்டிய செயலாக விளங்குகின்றது. இதற்காக உரிய நடவடிக்கை ஒன்றை எடுப்பது உகந்தது.

- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 02.45 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பிரதேச சபை
பெல்மதுள்ள